**தலைப்பு 193 - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 193 - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டை ஒத்திருந்தன என்பது,
(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக தொழிலாளர் பிரிவின், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் பிரிவின் மற்றும் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் ஆகியவற்றில் சேவையை விட்டு வெளியேறிய உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,746,710 மீதியொன்று அறிவிடப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன், அதனுள் ரூபா 393,914 தொகையானது 5 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாகவும், ரூபா 138,501 தொகையானது 10 முதல் 20 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மூலம் அறிவித்து கடனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சில நிலுவைகள் வசூலிக்கப்படுகின்றன. | கடன் மீதியை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 29 ஆந் திகதி தொழிலாளர் பிரிவில் பணிபுரியும் போது இறந்த ஒரு உத்தியோகத்தரின் இடர் கடன் மீதியான ரூபா 230,300 தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வசூலிக்கப்படவில்லை. | ரூபா 230,300 இடர் கடன் நிலுவை குறித்து குடும்ப உறுப்பினர்களுக்கு வாய்மொழியாக தெரிவித்தும், அது இன்னும் தீர்வாகவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், தாபனவிதிக் | கடன் மீதிகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கோவையின் xxiv அத்தியாயத்தின் 4.5 வது பிரிவின்படி, பிணையாளர்களிடமிருந்து அறவிடுதல் குறித்து பிணையாளர்களுக்கு தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 4 மூலதனச் செலவினம விடயங்களுக்காக ரூபா 16,400,000 தொகையான நிதியேற்பாட்டில் 100 சதவீதம் சேமிப்பு காணப்பட்டது. இதற்கிடையில், தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் அலுவலகத்தை அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு ரூபா 5,000,000 மற்றும் 17 ஆவது மாடியில் உள்ளக அறைத் தடுப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,000,000 நிதியேற்பாடு காணப்பட்டது. | 17 ஆவது மாடியில் உள்ளக அறைத் தடுப்புகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், குறைந்த செலவில் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் இந்த ஏற்பாடு எஞ்சியுள்ளமை. | நிதியேற்பாட்டினை உச்ச செயல்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 104(4) | 1,665,178 | நட்டம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையை இழப்பீட்டுத் திகதி முதல் / வெளிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றாலும், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் சம்பளச் செயலாக்கத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 5,133,519 தொகையான நிதி மோசடி இடம்பெற்று 2 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டாலும். அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், மேலும், ரூபா 1,665,178 ஆன தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | மேற்படி நிதி மோசடி தொடர்பில் நி.பி.104 இன் பிரகாரம் அப்போதைய பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட குழுவினால் ஆரம்ப அறிக்கை தயாரிக்கப்பட்டு, அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக மேற்படி அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதுடன், நிதி மோசடி தொடர்பான மீட்பு நடவடிக்கைகள் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் என்பது. | நட்டங்கள் தொடர்பான நிறுவன விசாரணைகள் நி.பி. பிரகாரம் மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 610 மற்றும் 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | - | ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் உதவியின் கீழ் மூன்று மாவட்டங்களில் கரிம உர உற்பத்தி திட்டங்களை நிறுவுவதற்கு 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 40,000 ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த உதவித் தொகையில் ஐ.அ.டொலர் 28,000 (ரூபா 5,699,900) சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் உற்பத்தித் திறன் செயலகத்தின் வங்கிக் கணக்குகளில் | இதன் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்கான அனைத்து உதவித் தொகைகளும் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பினால் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு உதவிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தக்கவைக்கப்பட்டிருந்தன. | எவ்வாறாயினும், கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டபடி, திட்டங்களுக்காக பெறப்படும் வெளிநாட்டு உதவிப் பணத்தை திறைசேரியின் ஊடாகப் பெறுவதற்கு உரிய செலவினத் தலைப்புகளை உருவாக்கி தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்குப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கு மற்றும் செயற்பணி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் பிரதான பணியொன்றாக குறிப்பிடப்பட்டிருந்த தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகள் மற்றும் ஊழியர் நலன்புரி நிதியத்தினை நிர்வகித்தல் ஆகிய பணிகள் உரிய முறையில் நிறைவேறியிருக்கவில்லை என்பது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் அவதானிக்கப்பட்டது. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | இலங்கையின் தேசிய மனிதவளம் மற்றும் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல். | வேலைவாய்ப்புக்கான புலம்பெயர்வு தொடர்பான இலங்கை தேசிய கொள்கை மற்றும் செயலநடவடிக்கைத் திட்டம் 2023.09.12 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு 2023.10.25 ஆந் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது. தேசியக் கொள்கையை செயல்படுத்துவதற்கான தேசிய அளவிலான கண்காணிப்பு பொறிமுறையான வேலைவாய்ப்புக்கான புலம்பெயர்வுகள் தொடர்பான தேசிய ஆலோசனைக் குழு நிறுவப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | நோக்கம் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | தனியார் சேமலாப நிதியத்தினை நிர்வகிப்பதற்கான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவுகள் மற்றும் பிரமாணங்களின் திருத்தம். | சட்டத்தின் திருத்தத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், அதன் மூலம் விதிகளை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இது சட்டத்தின் பிரிவுகள் மற்றும் ஒழுங்குமுறைகளை திருத்துவதற்கும், வழக்குகளை தாக்கல் செய்யும் செயல்முறையை சீரமைக்கும் என்றும் | நிதியத்தின் நிர்வாகத்திற்கு தேவையான சட்டங்கள் மற்றும் விதிகள் வகுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (iii) | வெளிநாட்டில் பணிபுரிந்துவிட்டு தீவுக்குத் திரும்பும் மக்கள் தொழில் தொடங்குவதற்காக சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். | வெளிநாட்டு வேலை வாய்ப்பை முடித்துவிட்டு இலங்கைக்கு திரும்பும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தொழில் தொடங்குவதற்காக பல்நோக்கு கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>வெளிநாட்டிற்குச் செல்வதற்குள்ள விசேட கவனம் தேவைப்படும் அடையாளம் காணப்பட்ட குடும்ப அலகுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு (IOM) மற்றும் ஹெல்விடாஸ் இலங்கை நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில், எமது அமைச்சின் ஒருங்கிணைப்புடன், தென் மாகாணத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை மீள் ஒருங்கிணைப்புக்கு பங்களிக்கும் கள உத்தியோகத்தர்களுக்கான தொழில்முயற்சி மேம்பாடு மற்றும் நிதி கல்வியறிவு குறித்த பயிற்சித் திட்டம், ஒரு முன்னோடித் திட்டமாக, தென் மாகாணத்திலுள்ள 29 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வணிகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு | முறையான வேலைத்திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டுள்ளமை. | |
| (iv) | 1985 இன் 21 ஆம் இலக்க வெறிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச்சட்டத்தின் திருத்தங்கள் | 2023.04.24 ஆந் திகதி முதல் முறையாக சட்டத் திருத்தத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்தால் அடிப்படை வரைபு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படை வரைபை அவ்வப்போது திருத்திய பின், இறுதியாக 2024.05.14 ஆந் திகதி திருத்தங்கள் மீதான விவாதம் நடைபெற்றது. இறுதி வரைபுக்கு சட்டமா அதிபரின் அனுமதி அறிக்கையை வழங்கியதன் பின்னர் மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று பாராளுமன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்க முடியும். | காலத்தின் தேவைக்கேற்ப கட்டளைச் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். |
| (v) | தற்கால தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளல். (Unified Labour Law Reforms) | தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப தொழிலாளர் சட்டங்களை சீர்திருத்த இந்த அமைச்சினை வழிநடத்துவதன் மூலம் தொழிற்சங்கங்கள், தொழில்வழங்குநர்கள் உள்ளிட்ட ஆர்வமுள்ள தரப்பினரிடையே 7 சுற்று விவாதங்களை நடாத்தி கருத்துகளைப் பெற்ற பின்னர், தற்போதுள்ள 13 சட்டங்களைத் திருத்துவதற்கும், மற்றும் தற்போதைய தொழில் உலகிற்கு பொருந்தும் வகையில் புதிய விடயங்களை | உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

உள்ளடக்கிய வேலைவாய்ப்புச் சட்டத்தைத் தயாரிப்பதற்கும் 2023.08.07 ஆந் திகதிய அமைச்சர்கள் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. ஒரு குழுவால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க சட்ட வரைபு சட்ட வரையுநர் திணைக்களத்தால் கண்காணிக்கப்படுகிறது. இறுதி வரைபு கிடைத்தவுடன், அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்று பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க முடியாது என்பது.

**3.2 எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை பெற்றுக்கொண்டிராமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையில் நாடளாவிய ரீதியில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தொழிலாளர்களின் விருப்பத்திற்கிணங்க "தொழிலாளர் பாதுகாப்பு" திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர், ஆனால் இந்த திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு என்ன நன்மைகள் கிடைக்கும் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. . | இந்தத் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களையும் பராமரிப்புத் திட்டங்களையும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தேவைக்கேற்ப தயாரிக்கின்றனர். அபிவிருத்தி திட்டங்கள் - வெளிநாட்டுப் பணியாளரை வெளிநாடு செல்வதன் நோக்கத்திற்கு ஏற்பத் தயார்படுத்துவதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டு, அதைச் | தொழிலாளர் பாதுகாப்புத் நிகழ்ச்சித் திட்டம் முறையாகவும் திறம்படவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயல்படுத்துவதில் பின்தொடர்தல் செய்யப்படுகிறது. பராமரிப்புத் திட்டங்கள் - வேலை நிமித்தமாக வெளிநாடு செல்லும் போது, 2-18 வயதுக்குட்பட்ட திருமணமாகாத குழந்தைகளைக் கொண்ட பெண்களால் பராயமடையாத குழந்தைகளைப் பராமரிப்பதற்குத் தகுந்த வேலைத்திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு மேலதிகமாக, சமூக ரீதியான ஆபத்தில் உள்ளவர்களை அந்த ஆபத்திலிருந்து மீட்பதற்கு மீட்பதற்கான பராமரிப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் என்பது. | |
| (ஆ) | 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தொழிலாளர் இழப்பீட்டுச் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி, தொழிலாளர்களில் விபத்து அல்லது இறப்புக்கு ஆளானால் அவருக்காக தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்தில் வழக்குகளை விசாரிக்கும் போது சிவில் நடைமுறைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் சாட்சியங்கள் கட்டளைச் சட்டம் ஆகியவை பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாலும் இரு தரப்பினருக்கும் நியாயமான மற்றும் சட்டத்திற்கமைவான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதாலும் நட்டஈடு வழங்கும் செயல்முறை தாமதமானமை வெளிப்படுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 52 கோவைகளுக்குரிய | தொழிலாளர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் படி, பணியின் போது ஏற்படும் விபத்துகள் அல்லது தொழில்சார் நோய் ஏற்பட்டால், இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை, வழங்க தொழில் தருநர் ஒப்புக் கொண்டால், உடனடியாக வசூலிக்க முடியும். பிரதிவாதி ஒப்புக் கொள்ளாத வழக்குகளில், நீதிமன்ற நடவடிக்கை எடுக்க நேர்கின்றமையால் தாமதம் ஏற்படுகின்றது. | பேரிடர்களால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் செயல்முறை நெறிப்படுத்தப்பட்டு செயற்திறனானதாக காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்களின் பிரகாரம், 4-12 ஆண்டுகளில் 20-43 முறை வழக்குகள் அழைக்கப்பட்டதை அவதானிக்க முடிந்ததுடன், இதற்கிடையில், மரண விபத்துக்கள் தொடர்பான 08 கோவைகளும் இருந்தன, ஆனால் அது தொடர்பான நடைமுறைகள் நிறைவு செய்யப்படவில்லை. | | |
| (இ) | பணிபுரியும் போது பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் முடிவு செய்தாலும், சம்பந்தப்பட்ட உத்தரவின்படி தொழில்தருநர் இழப்பீடு வழங்காததால், 2023 திசெம்பர் 31 வரை, 54 வழக்குகள் காரணமாக ஊழியர்களுக்கு வழங்கப்படாத இழப்பீட்டுத் தொகை ரூபா 12,344,117 ஆகும். இதேவேளை, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 வருடங்களைத் தாண்டிய 11 வழக்குகளும், 5-10 வருடங்களுக்கு இடைப்பட்ட 22 வழக்குகளும், 1-4 வருடங்களுக்கு இடையில் 11 வழக்குகளும் பதிவாகியுள்ளன. | தொழில் இழப்பீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் பிரதிவாதியின் சொத்துக்களை பறிமுதல் செய்ய, தொழில் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிராகரம் பிடியாணை பிறப்பிக்கப்படும். அந்த பிடியாணையை செயற்படுத்தும் அதிகாரமானது பிரதிவாதி வசிக்கும் பகுதியில் உள்ள நீதவான் நீதிமன்றத்திற்கு ஆகும். தொழில் இழப்பீட்டு ஆணையாளர் நீதவான் அதிகாரத்திற்கு அமைவாக தொழில் இழப்பீட்டு ஆணையாளர் வழங்கிய தீர்ப்பாக கருதி அதனை நடைமுறைப்படுத்தல் உரிய நீதிமன்றத்தின் பதிவாளரால் மேற்கொள்ளப்படும். அதற்கேற்ப, கோரிய தரப்பினர் முன் வந்து, நீதவான் நீதிமன்றத்தின் நிதி அதிகாரிகளுக்கு ஆதரவை வழங்க வேண்டும் நீதிமன்றத்தின் மூலம் எதிர்மனுதாரரின் சொத்தை காட்டவும், தடை செய்யப்பட்ட சொத்துக்களை ஏலம் | பேரிடர்களால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் செயல்முறை நெறிப்படுத்தப்பட்டு செயற்திறனானதாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விடவும், இழப்பீடு வசூலிக்கவும் விண்ணப்பதாரர்கள் முன்வராத காரணத்தால், அந்த 54 பிடியாணை வழக்குகள் தொடர்பான இழப்பீடு தொகையை வசூலிக்க முடியாதுள்ளது. | |
| (ஈ) | தொழிலில் ஈடுபட்டுள்ள போது ஏற்படும் விபத்துக்களால் உயிரிழக்கும் ஊழியர்களின் பராயமடையாத குழந்தைகளுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை அவர்கள் உரிய வயது வரும் வரை தேசிய சேமிப்பு வங்கியில் தொழில் இழப்பீட்டு ஆணையாளரின் பெயரில் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்து, அவர்கள் உரிய வயதை அடைந்தவுடன் அவர்களுக்கு விடுவிக்க வேண்டும். அவ்வாறு உரிய வயதை அடைந்த 110 சிறுவர் கணக்குகளுக்கு விடுவிக்கப்படாத சுமார் 40 வருடங்கள் பழமையான நிலையான வைப்புத்தொகையின் பெறுமதி ரூபா 638,296 ஆகும். அந்த கணக்குகளில் 2021 ஒக்தோபர் 28 ஆந் திகதி மீதி உறுதிப்படுத்தல்களின் படி, வட்டியுடன் கூடிய பெறுமதி ரூபா 3,383,043 ஆகும். 2021 ஆம் ஆண்டில், 18 வயது பூர்த்தி செய்து விடுவிக்கப்படாத ரூபா 235,000 தொகையும் 2022 ஆம் ஆண்டில், 18 வயதுக்கு முழுமையாக விலக்கு அளிக்கப்படாத நிலையான வைப்புத் தொகை ரூபா 375,000 ஆகும். | உரிய வயதை அடைந்த 40 வருடங்கள் பழமையான 109 சிறார்களின் விடுவிக்கப்படாத நிலையான வைப்புத் தொகை ரூபா 614,996.00 மற்றும் அந்தக் கணக்குகளுடன் தொடர்புடைய வட்டித் தொகை ரூபா 3,351,582.12 ஆகும். 2021 ஆம் ஆண்டு 18 வயது பூர்த்தி செய்து விடுவிக்கப்படாத கோவைகளின் எண்ணிக்கை 02 இற்குரிய பெறுமதி ரூபா 200,000.00 ஆகும். 2022 ஆம் ஆண்டில், 18 வயது நிரம்பிய ஆனால் விலக்கு அளிக்கப்படாத 02 கோப்புகள் தொடர்பான நிலையான வைப்புத் தொகையின் பெறுமதி ரூபா 150,000.00 ஆகும். இழப்பீடு பெறும் நபர்களின் அடையாளத்தை நிரூபிக்க தேசிய அடையாள அட்டைகளை வழங்காதது, ஆவணங்களில் உள்ள குறைபாடுகள், தற்போதைய முகவரிகளை அடையாளம் காண இயலாமை போன்ற காரணங்களால் இழப்பீட்டை விடுவிக்க முடியாதுள்ளமை. | இழப்பீட்டு தொகையை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | உயிராபத்தான மற்றும் உயிராபத்தற்ற விபத்துக்களுக்கு உரியதாக தொழிலாளி அல்லது அவரைச் சார்ந்தவர் இழப்பீடு கோரி தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு 6 வாரங்களுக்குள் தொழில்தருநர் சாதகமாக பதிலளிக்காதபோது வழக்குகள் தொடங்கப்படுகின்றன. இருப்பினும், 35 கோப்புகளை பரிசீலித்ததில், 11 வழக்குகில் தொழிலாளருக்கு வழக்குக்கு விண்ணப்பித்து முதல் வாதிக்கு சம்மன் அனுப்ப 11 முதல் 115 மாதங்கள் வரை கடந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது பிரதிவாதியின் பெயர் சரியாக இருக்க வேண்டும், தகவல் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் சரியான மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும், இல்லையெனில் இழப்பீடு நீதிமன்றத்தில் அல்லது மேல்முறையீட்டில் நிராகரிக்கப்படலாம். எனவே நீதிமன்றத்திற்கு செல்லும் முன் தகவல்களை சரிபார்ப்பதற்கு காலம் கடந்துள்ளது. | பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹியங்கனை மற்றும் தெல்தெனிய வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை விநியோகிக்கும் செயற்திட்டத்திற்கு 90,000 அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. இந்தத் செயற்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 63,000 முற்பணமாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ,மேலும் மற்றொரு செயற்திட்டத்திற்காக (உரம் செயற்திட்டம்) பெறப்பட்ட ஐ.அ.டொலர் 27,000 செயற்திட்டத்தை நிறைவு செய்ய செலவிடப்பட்டது. மருத்துவ உபகரண விநியோகத் | ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் நன்கொடையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் மஹியங்கனை மற்றும் தெல்தெனிய வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை விநியோகிப்பதற்காக ஏனைய செயற்திட்டங்களினால் செலவிடப்பட்ட ஐ.அ.டொலர் 27,000 அரச கணக்கு சுற்றறிக்கையின் அடிப்படையில் தற்போது ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பினால் திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டம் 2023 ஏப்ரல் மாத்தில் நிறைவடைந்தாலும், பணத்தை மீளளிப்பு செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, இந்தத் தொகையை திருப்பிச் செலுத்த முடியவில்லை. தேவையான பெறுகைக் நடவடிக்கைகளின் துரிதமாக ஏற்பாடு செய்யப்படாமையால் முதலில் திட்டமிடப்பட்ட இரண்டு பொருட்களை கொள்வனவு செய்ய முடியவில்லை, மேலும் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை அந்நிய செலாவணி விகிதம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வரும் சூழ்நிலையில், ஐ.அ.டொலர் 2,221 அங்கீகரிக்கப்பட்ட உதவித் தொகையை விட அதிகமாகச் செலுத்த நேர்ந்திருந்தது. | | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில், ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பினால் சேதனப் பசளை செயற்திட்டத்தை செயல்படுத்த அங்கீகரிக்கப்பட்ட உதவித் தொகையான ஐ.அ.டொ. 40,000 தொகையில் ஐ.அ.டொ. 28,000 முன்பணமாக வழங்கப்பட்டிருந்தது.<br><br>இச் செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் 2022 திசெம்பர் வரை தாமதமானதுடன், நன்கொடைப் பணத்தில் ரூபா 2,091,854 மஹியங்கனை ஆதார வைத்தியசாலையிலும், ரூபா 31,960 தெல்தெனிய வைத்தியசாலையிலும், எஞ்சிய தொகையில் ரூபா 1,671,874 தாய்லாந்து மற்றும் பாக்கிஸ்தானில் வெளிநாட்டு பயிற்சிக்கு செல்ல விமான டிக்கெட்டுகளை வாங்குவதற்கு செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்படவில்லை. | 2021 ஜூன் மாதம் முதல் நிறைவேற்ற முடியாதிருந்த இந்த செயற்திட்டத்தின் காலத்தை 2022 ஜூலை முதல் மேலும் நீட்டிக்க ஆசிய உற்பத்தி அமைப்பின் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, 2022.07.04 ஆந் திகதி அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டு அந்தத் திட்டத்திற்காகக் கிடைத்த ஐ.அ.டொ. 28000 தொகையானது, அப்போது செயற்பட்ட மஹியங்கனை ஆதார வைத்தியசாலைத் திட்டத்திற்கும், தெல்தெனிய வைத்தியசாலைத் திட்டத்திற்கும் செலவிடப்பட்டதுடன், மீதிப் பணம் விமான டிக்கட்டுகளை கொள்வனவு | உத்தேச நோக்கங்களை அடைய வெளிநாட்டு உதவி பணம் செலவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்வதற்கும் செலவிடப்பட்டது. எவ்வாறாயினும், இந்த கரிம உர செயற்திட்டத்தின் எஞ்சிய தொகையான கிட்டத்தட்ட ஐ.அ.டொ.12000 வேலைப் பொருட்கள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதன்படி, மீதமுள்ள தொகையை திருப்பிச் செலுத்துவதற்கான 2024/04/08 ஆந் திகதியிடப்பட்ட பட்டியல்கள் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. | |

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உற்பத்தித்திறன் செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,465,200 ஆரம்ப செலவில் கொள்வனவு செய்யப்பட்ட ebreeze கணினி கட்டமைப்பின் பராமரிப்புக்காக 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ரூபா 4,852,095 செலவிடப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்தில் மனிதவள முகாமைத்துவம் மற்றும் குறுஞ்செய்தி சேவைகளுக்கு இந்த கட்டமைப்பு பயன்படுத்தப்பட்டதுடன், நாடு முழுவதும் பணிபுரியும் உற்பத்தித்திறன் செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிர்வாகம், பயிற்சி, விடுமுறை முகாமைத்துவம் போன்ற மிகவும் பயனுள்ள செயற்பாடுகளில் இந்த மென்பொருளை திறம்பட பயன்படுத்தாததன் காரணமாக இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட தொகை பொருளாதார ரீதியாக பயனுள்ளதாக காணப்படவில்லை. | தற்போது ebreeze கட்டமைப்பு விடுமுறை முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்படுவதுடன் , அதற்கு மேலதிகமாக இந்த ஆண்டு மே மாதம் முதல் அஞ்சல் முகாமைத்துவத்திற்கும் முழுமையாகப் பயன்படுத்தப்படும். மேலும், களஞ்சிய நிர்வாக நடவடிக்கைகளுக்கு கணினியைப் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கைரேகை இயந்திரத்துடன் | வளங்களை திறம்பட பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ebreeze கட்டமைப்பு இணைக்கப்பட்டு, தற்போது, கைமுறையாக (Manual) விடுப்பை பொழிப்பாக வழங்குவதற்கு பதிலாக, அந்த கட்டமைப்பின் மூலம் உத்தியோகத்தர்களின் விடுமுறை பொழிப்பு அறிக்கையை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில், நாடளாவிய ரீதியில் உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் முன்னேற்றத்திற்காக இது பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (ஆ) | உற்பத்தித் திறன் செயலகம் நடாத்திச் செல்லப்படும் செத்சிறிபாய இரண்டாம் கட்டம், 10 வது மாடி வளாகத்திற்கான 2023 ஜனவரி முதல் 2025 ஜனவரி வரையிலான காலகட்டத்திற்காக வாடகை மற்றும் சேவைக் கட்டணங்கள் ஒரு சதுர அடிக்கான கிரயம் 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், இதற்காக நிறுவனம் ஒரு தனியார் கம்பனியுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. 2023 ஆம் ஆண்டு முதல், மாத வாடகை ரூபா 3,548,342 ஆக காணப்படுவதுடன், வருடாந்த கத்தகை வாடகைப் பெறுமதி ரூபா 30,578,901 ஆகும். மேற்படி குத்தகைப் பணத்தை குறைப்பதற்காக, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் உள்ள தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான இடத்திலிருந்து ஒரு வளாகத்தினை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. | 2024.04.30 ஆந் திகதி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலைமையில் அமைச்சின் பிரதான உற்பத்திப் பகுதிகளின் முன்னேற்றம் குறித்து ஆராயும் கூட்டத்தில், தொழிலாளர் தலைமைச் செயலக கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்ப்புக்குப் பின்னர் தேசிய உற்பத்தித் திறன் செயலக அலுவலகத்தை அந்த வளாகத்திற்கு கொண்டு செல்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது. | செலவுகள் குறையும் வகையில் செயற்பட வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் இழப்பீட்டுக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி, விபத்தின் தன்மை, அழைப்பு விடுக்கப்பட்ட திகதி, வழக்கு திகதி, இழப்பீட்டுத் தொகை வைப்புச் செய்தல் போன்ற நிர்வாகத் தகவல்கள் கணினி கட்டமைப்பில் சேர்க்கப்படாததால், தகவல் சரிபார்ப்புக்காக கோப்புகள் மற்றும் ஆவணங்கள் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட வேண்டும். இதனால், கோப்புகளின் தகவல்களை விரைவாகப் பெறுவதில் சிரமம் ஏற்படுவதுடன், ஒரு கோவை தொலைந்துபோனால் தகவல்களைப் பெற முடியாமல் போகும் அபாயம் நிலவுகின்றது. | அனைத்து இழப்பீடு நீதிமன்றங்களுக்கு உரியதாக தனித்தனி பதிவேடுகள் நாளதுவரையாக பராமரிக்கப்படுகின்றன. | தகவல்களை கணினிமயமாக்கி, நிர்வாக பணிகளை எளிதாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2005 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தொழிலாளர் இழப்பீட்டுத் திருத்தச் சட்டத்தின் பகுதி IV இன் பிரிவு 13(1) இன் படி, இழப்பீட்டு ஆணையாளரிடம் வைப்புச் செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகை, அதற்குரிய நபர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பகிர்ந்தளிக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 4,689,859 ஆகும். | இழப்பீட்டுத் தொகை ஆணையாளரிடம் வைப்புச் செய்யப்பட்ட போதிலும், இதுவரை பகிர்ந்தளிக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இழப்பீட்டு தொகை ரூபா 3,074,493 ஆகும். இந்த தொகையில், 04 கோவைகளுக்கு உரியதாக வைப்புச் செய்யப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய ரூபா 1,55,996 தொகை காணப்பட்டது. | பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உரித்தான நலன்களை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

<table>
<tr><th></th><th>கணக்காய்வு அவதானிப்புக்கள்</th><th>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</th><th>பரிந்துரை</th></tr>
<tr><td>(அ)</td><td>தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 38 (ஆ) மற்றும் (ஏ) ஆகியவற்றின் அடிப்படையில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள் நிறைவேற்றப்படுவதை சான்றுபடுத்துவதற்காக அந்த சட்டத்தின் 40 ஆவது பிரிவின்படி செய்யப்பட்ட நியமனங்கள் மற்றும் நி.பி. 133 மற்றும் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு செயல்படுத்தப்பட வேண்டும். ஆனால் 2023 ஆம் ஆண்டில் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் காணப்படும் தேசிய தொழிலசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனம், சிரம வாசனா நிதியம் மற்றும் தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் ஆகியவற்றில் முறையான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்படவில்லை.</td><td>2023 ஆம் ஆண்டிற்கான பின்வரும் நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வு பின்வருமாறு நடாத்தப்பட்டுள்ளன.
<table>
<tr><th>நிறுவனம்</th><th>மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம்</td><td>13</td></tr>
<tr><td>தேசிய தொழிலசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனம்</td><td>01</td></tr>
<tr><td>தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம்</td><td>02</td></tr>
</table>
மேலும், 2023 ஆம் ஆண்டில் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் காலாண்டு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்குள், இந்த நிறுவனங்களின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டுள்ளன.<br><br>தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் உள்ள சிரம வசனா நிதியத்தின் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றியமாக உள்ளதால் 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வுகள் எதுவும் நடாத்தப்படவில்லை. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்த நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாக விவகாரங்கள், பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் காலாண்டு</td><td>உள்ளகக் கணக்காய்வு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.</td></tr>
</table>

அறிக்கைகள் மூலமாகவும், அமைச்சின் கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவிலும், சிரம வாசன நிதியத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிலும் கண்காணிக்கப்பட்டுள்ளன.

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தின் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நீதித்துறை உத்தியோகத்தரான மேலதிக தொழில் இழப்பீட்டு ஆணையாளர் பதவி மற்றும் இலங்கை நிர்வாக சேவையின் பதவியொன்றான உதவி இழப்பீட்டு ஆணையாளர் (நிர்வாகம்) ஆகிய பதவிகளுக்கு உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்றது. | தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் 03 நீதித்துறை உத்தியோகத்தர் பதவிகள் உள்ளன. அதாவது தொழில் இழப்பீட்டு ஆணையாளர்/மேலதிக நீதவான், மேலதிக தொழில் இழப்பீட்டு ஆணையாளர்/மேலதிக நீதவான் மற்றும் பிரதி தொழில் இழப்பீட்டு ஆணையாளர்/மேலதிக நீதவான் ஆகிய பதவிகள் ஆகும். இந்தப் பதவிகளின் நியமன அதிகாரி நீதிச் சேவை ஆணைக்குழு என்பதுடன், அந்த நியமனம் தொடர்பான முடிவுகள் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படுகின்றன.<br><br>உதவித் தொழில் இழப்பீட்டு ஆணையாளர் (நிர்வாகம்) பதவியானது இலங்கை நிர்வாக சேவையுடன் தொடர்புடைய பதவி என்பதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நீண்டகாலமாக அந்தப் பதவிக்கான நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை. | உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |